வணக்கம் நண்பர்களே...

இந்தப்பகுதி முற்றிலும் ஒன்பதாவது தமிழ் சமச்சீர் புத்தகம் செய்யுள் பகுதியில் இருந்து எடுக்கப்பட்ட கேள்விகள் அடங்கிய தொகுப்பாகும். விடைகளும் ஒவ்வொரு பகுதியின் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு சில வினாக்கள் மட்டும் புத்தகத்தை தாண்டி வெளியில் இருந்து எடுக்கப்பட்டவை.

எனவே முதலில் நீங்கள் பாடப்புத்தகத்தை படித்து முடித்த பிறகு இந்தப்பகுதியில் உள்ள வினாக்களுக்கு பதில் அளித்து பழகுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்பதாவது தமிழ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள செய்யுள் பகுதிகள்:

1) வாழ்த்து
2) திருக்குறள்
3) சிறுபஞ்சமூலம்
4) பாஞ்சாலி சபதம்
5) ஓய்வும் பயனும்
6) திருவிளையாடற்புராணம்
7) இன்பம்
8) முத்தொள்ளாயிரம்
9) கலிங்கத்துப்பரணி
10) உமர்கய்யாம் பாடல்கள்
11) மணிமேகலை
12) பெண்மை
13) இரட்சணிய யாத்திரிகம்
14) புறநானூறு
15) குறுந்தொகை

அனைவரும் அனைத்து வினாக்களுக்கும் பதில் அளித்து பழகி வெற்றிப்பெற என் வாழ்த்துக்கள்

இப்படிக்கு

மீண்டும் உங்கள் ஆதரவுடன்

கோ.பழனி முருகன்

## ஒன்பதாம் வகுப்பு - செய்யுள் பகுதி

### 1) வாழ்த்து

1) உலகம் யாவும் தாமுள வாக்கலும் என்ற பாடலை பாடியவர் யார்?

A] கம்பர்

B] கபிலர்

C] பரணர்

D] ஔவையார்

2) கம்பர் தம் பாடலில் கீழ்க்கண்டவற்றில் யாரை நாம் அடைக்கலமாக பற்றுவோம் என்று கூறுகிறார்?

A] இயற்கை

B] மன்னன்

C] இறைவன்

D] பெற்றோர்

3) உலகம் யாவும் தாமுள வாக்கலும் - என்ற வரியில் இடம்பெற்றுள்ள உளவாக்கல் என்ற சொல்லானது கீழ்க்கண்ட எந்த செயலைக் குறிக்கிறது?

A] காத்தல்

B] படைத்தல்

C] அழித்தல்

D] நிலைபெறுத்தல்

4) தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே - என்றா வரியில் இடம்பெற்றுள்ள தலைவர் என்ற சொல் குறிக்கும் பொருள் யாது?

A] புலவர்

B] அரசர்

C] மக்கள்

D] இறைவர்

5) கம்பர் பிறந்த ஊர் யாது?

A] பொன்விளைந்த களத்தூர்

B] தேரழுந்தூர்

C] திருப்பெழுந்தூர்

D] திருநாவலூர்

6) கம்பர் இயற்றிய நூல்களில் தவறானது எது?

A] சடகோபர் அந்தாதி

B] சரசுவதி அந்தாதி

C] திருக்கை வழுக்கம்

D] ஏர் எழுபது

7) கம்பர் பிறந்த ஊரானது கீழ்க்கண்ட எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

A] நாகப்பட்டினம்

B] மயிலாடுதுறை

C] நாமக்கல்

D] கடலூர்

8) கம்பர் யாருடைய அவையில் அவைப்புலவராக விளங்கினார்?

A] ஆதித்த சோழன்

B] ராஜராஜ சோழன்

C] வீர்ராஜன் சோழன்

D] குலோத்துங்க சோழன்

9) கம்பரை போற்றிய வள்ளல் யார்?

A] சந்திரன் சுவர்க்கி

B] சடையப்ப வள்ளல்

C] பெருந்தேவனார்

D] சடையப்ப புலவர்

10) கம்பர் வாழ்ந்த நூற்றாண்டு எது?

A] கி.பி.12 ஆம் நூற்றாண்டு

B] கி.பி.11 ஆம் நூற்றாண்டு

C] கி.பி.10 ஆம் நூற்றாண்டு

D] கி.பி.13 ஆம் நூற்றாண்டு

11) கம்பர் தான் இயற்றிய கம்பராமாயணத்திற்கு இட்ட பெயர் யாது?

A] இராமகீதம்

B] இராமவதாரம்

C] இராமபிராயணம்

D] இராமனின்கதை

12) கம்பராமாயணத்தின் நூல் அமைப்பு யாது?

A] 6 காண்டம் + 110 படலம் + 10,500 பாடல்கள்

B] 5 காண்டம் + 110 படலம் + 10,450 பாடல்கள்

C] 6 காண்டம் + 115 படலம் + 10,600 பாடல்கள்

D] 6 காண்டம் + 113 படலம் + 10,500 பாடல்கள்

13) உலகம் யாவும் தாமுள வாக்கலும் - எனத் தொடங்கும் கம்பராமாயண பாடலானது கீழ்க்கண்ட எந்த காண்டத்தில் அமைந்துள்ளது?

A] பால காண்டம்

B] அயோத்தியா காண்டம்

C] யுத்த காண்டம்

D] ஆரணிய காண்டம்

14) பால காண்டத்தில் உள்ள மொத்த படலங்களின் எண்ணிக்கை யாது?

A] 17 படலங்கள்

B] 22 படலங்கள்

C] 39 படலங்கள்

D] 12 படலங்கள்

15) கம்பரை ஆதரித்த சடையப்ப வள்ளலை கம்பர் எத்தனை பாடல்களுக்கு ஒரு பாடல் வீதம் அவரை பாடி சிறப்பித்துள்ளார்?

A] 150 பாடல்கள்

B] 100 பாடல்கள்

C] 1000 பாடல்கள்

D] 500 பாடல்கள்

16) கம்பர் தான் இயற்றிய கம்பராமாயண நூலை எங்கு அரங்கேற்றினார்?

A] திருவழுந்தூர்

B] சிதம்பரம்

C] திருமறைக்காடு

D] திருவரங்கம்

17) கம்பர் என்றொரு மானுடன் வாழ்ந்தது - என தன்னுடைய சுயசரிதையில் குறிப்பிட்ட கவிஞர் யார்?

A] பாரதியார்

B] பாரதிதாசன்

C] வாணிதாசன்

D] வைரமுத்து

18) கல்வி சிறந்த தமிழ்நாடு புகழ்க் கம்பர் பிறந்த தமிழ்நாடு - என பாடியுள்ளவர் யார்?

A] திரு.வி.க

B] பாரதிதாசன்

C] பாரதியார்

D] வண்ணதாசன்

19) அம் புவியில் மக்கள் அமுதம் அருந்த வைத்த கம்பர் கவியே கவி - என குறிப்பிட்டு பாடிய கவிஞர் யார்?

A] திரு.வி.க

B] கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை

C] பாரதியார்

D] நாமக்கல் கவிஞர்

20) தமிழ்மொழி தனக்கு ஒரு தவச்சிறப்பைத் தந்தது கம்பரின் கவிச் சிறப்பே - என பாடியவர் யார்?

A] தேசியவிநாயகம் பிள்ளை

B] பலபட்டை சொக்கநாத புலவர்

C] திரு.வி.க

D] நாமக்கல் கவிஞர்

21) கீழ்க்கண்ட யாருடைய பாடலானது கம்பரை விருத்தம் என்னும் ஒண்பா பாடுவதில் மிகச் சிறந்தவர் என்று குறிப்பிடுகிறது?

A] தேசியவிநாயகம் பிள்ளை

B] பலபட்டை சொக்கநாத புலவர்

C] திரு.வி.க

D] நாமக்கல் கவிஞர்

22) கீழ்க்கண்டவற்றில் உழவுத் தொழிலையும், உழவரையும் பாராட்டி கம்பர் இயற்றிய நூல்கள் எது?

A] சரசுவதி அந்தாதி, மும்மணிக்கோவை

B] சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி

C] ஏர் எழுபது, திருக்கை வழக்கம்

D] சிலையெழுபது, ஏர் எழுபது

23) பன்னிரு ஆழ்வார்களில் எந்த ஒருவர் மீது கம்பர் கொண்ட ஈடுபாட்டால் சடகோபர் அந்தாதி என்ற நூலை எழுதினார்?

A] காரைக்கால் அம்மையார்

B] திருமங்கையாழ்வார்

C] பெரியாழ்வார்

D] நம்மாழ்வார்

24) கம்பர் கம்பராமாயண நூலை அரங்கேற்றுவதற்கு முன்னர் கீழ்க்கண்ட எந்த நூலை முதலில் பாடினார்?

A] சடகோபர் அந்தாதி

B] சரசுவதி அந்தாதி

C] ஏர் எழுபது

D] மும்மணிக்கோவை

விடைகள் - வாழ்த்து

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 2 | C | 3 | B | 4 | D | 5 | B |
| 6 | C | 7 | A | 8 | D | 9 | B | 10 | A |
| 11 | B | 12 | D | 13 | A | 14 | B | 15 | C |
| 16 | D | 17 | A | 18 | C | 19 | B | 20 | D |
| 21 | B | 22 | C | 23 | D | 24 | A | | |

## 2) திருக்குறள்

1) இகழ்வார் பொறுத்தல் தலை - என்ற வரியில் இடம்பெற்றுள்ள தலை என்னும் சொல்லின் பொருள் யாது?

A] சிரம்

B] சிறந்த பண்பு

C] ஓர் உருப்பு

D] மனிதன்

2) வள்ளுவர் வலிமையுள் சிறந்த வலிமை என்று கீழ்க்கண்டவற்றில் எவற்றை குறிப்பிடுகிறார்?

A] விருந்தினரை வரவேற்க இயலாது தவிர்க்கும் நிலை

B] விருந்தினருக்கு உபசரிக்க இயலாத நிலை

C] அறிவற்றார் செய்யும் தீங்குகளை பொறுத்துக் கொள்வது

D] அறிவுடையார் செய்யும் நன்மைகளை பொறுத்துக் கொள்வது

3) நல்ல குணங்கள் நம்மை விட்டு நீங்காமல் இருக்க எவற்றை நாம் போற்றி கடைபிடிக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்?

A] பொறுமை

B] வலிமை

C] வறுமை

D] பெருமை

4) சான்றோர்கள் யாரை பொன்போல் மதித்து மனதுக்குள் வைத்துக் கொள்வர் என வள்ளுவர் கூறுகிறார்?

A] பிறர் செய்யும் தீங்கை மன்னிப்பவர்

B] பிறர் செய்யும் தீங்கை தண்டிப்பவர்

C] பிறர் செய்யும் தீங்கை ஆதரிப்பவர்

D] பிறர் செய்யும் தீங்கை பொறுப்பவர்

5) பொன்றும் துணையும் - என்பதன் பொருள் யாது?

A] தீமைகளை பொறுப்பவர்

B] ஒரு நாள்

C] உலகம் உள்ளவரை

D] தண்டித்தவர்

6) திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்(து) - எனத் தொடங்கும் குறளில் இடம்பெற்றுள்ள தற்பிறர் என்னும் சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] ஏழாம் வேற்றுமைத் தொகை

B] நான்காம் வேற்றுமைத் தொகை

C] ஆறாம் வேற்றுமைத் தொகை

D] வினையாலணையும் பெயர்

7) கீழ்க்கண்டவற்றில் யார் பற்றற்ற துறவியரினும் மேலானவர் யார் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்?

A] பிறர் செய்யும் தீங்கை பொறுப்பவர்

B] வரம்பு கடந்து பேசுவோரின் தீயசொற்களை பொறுத்துக் கொள்பவர்

C] அறிவற்றார் செய்யும் தீக்குகளை பொறுத்துக் கொள்வது

D] விருந்தினரை வரவேற்க இயலாது தவிர்க்கும் நிலை

8) உண்ணாது - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] வினைமுற்று

B] ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

C] வினையாலணையும் பெயர்

D] வினையெச்சம்

9) அனைத்து நாட்டினரும் இனத்தினரும் தமக்கே உரியெதெனக் கொண்டாடும் வகையில் பொதுவுடமைக் கருத்துகளைப் கொண்ட நூலை படைத்தவர் - என்று சிறப்பிக்கப்படுபவர் யார்?

A] வள்ளுவர்

B] தொல்காப்பியர்

C] கம்பர்

D] வள்ளலார்

10) ‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு’ - என்று திருவள்ளுவரை புகழ்ந்தவர் யார்?

A] பாரதியார்

B] பாரதிதாசன்

C] ஜி.யூ.போப்

D] பரிமேலழகர்

11) ‘வள்ளுவனை பெற்றதால் புகழ் பெற்றதே புகழ் வையகமே - என்று திருவள்ளுவரை புகழந்தவர் யார்?

A] பாரதியார்

B] பாரதிதாசன்

C] ஜி.யூ.போப்

D] பரிமேலழகர்

12) திருக்குறள் நூலின் சிறப்பு பெயர்களில் தவறானது எது?

A] உலகப் பொதுமறை

B] வாயுறை வாழ்த்து

C] தமிழ்மறை

D] தெய்வ நூல்

13) வள்ளுவரின் சிறப்பு பெயர்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] பொய்யா புலவர்

B] முதற்பாவலர்

C] பெருநாவலர்

D] செந்நாப்போதார்

14) திருக்குறள் நூலில் முதல் பிரிவான அறத்துப்பால் பிரிவில் எத்தனை இயல்கள் மற்றும் அதிகாரங்கள் உள்ளன?

A] 3 இயல்கள் + 38 அதிகாரங்கள்

B] 2 இயல்கள் + 25 அதிகாரங்கள்

C] 4 இயல்கள் + 38 அதிகாரங்கள்

D] 3 இயல்கள் + 25 அதிகாரங்கள்

15) இரண்டாம் பிரிவான பொருட்பால் பிரிவில் எத்தனை இயல்கள் மற்றும் அதிகாரங்கள் உள்ளன?

A] 2 இயல்கள் + 25 அதிகாரங்கள்

B] 3 இயல்கள் + 38 அதிகாரங்கள்

C] 4 இயல்கள் + 70 அதிகாரங்கள்

D] 3 இயல்கள் + 70 அதிகாரங்கள்

16) திருக்குறளின் கடைசி பிரிவான காமத்துப்பால் பிரிவில் எத்தனை இயல்கள் மற்றும் அதிகாரங்கள் உள்ளன?

A] 3 இயல்கள் + 25 அதிகாரங்கள்

B] 2 இயல்கள் + 25 அதிகாரங்கள்

C] 4 இயல்கள் + 38 அதிகாரங்கள்

D] 3 இயல்கள் + 70 அதிகாரங்கள்

17) அறத்துப்பாலில் இடம்பெற்றுள்ள இயல்களில் தவறானது எது?

A] பாயிரவியல்

B] இல்லறவியல்

C] அரசியல்

D] துறவறவியல்

18) பொருட்பாலில் இடம்பெற்றுள்ள இயல்களில் தவறானது எது?

A] களவியல்

B] அரசியல்

C] அங்கவியல்

D] ஒழிபியல்

19) திருக்குறளில் உள்ள பாடல்களை போற்றி பாராட்டிய பாடல்களின் தொகுப்பு எது?

A] திருவள்ளுவர்மாலை

B] திருக்குறள்மாலை

C] திருவள்ளுவமாலை

D] திருக்குறள்பாமாலை

20) திருக்குறளுக்கு உரை எழுதியவர்களில் யார் உரை சிறந்தது என்று தமிழ்ச் சான்றோர்களால் கூறப்படுகிறது?

A] திருமலையர்

B] மணக்குடவர்

C] தாமத்தர்

D] பரிமேலழகர்

21) இங்கிலாந்து மகாராணியார் காலையில் கண் விழித்ததும் முதலில் படித்த நூஎ எது?

A] திருக்குறள்

B] பைபிள்

C] இலியட்

D] தேம்பாவணி

22) அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் - எனத் தொடங்கும் குறளில் அமைந்துள்ள அணியிலக்கணம் எது?

A] எடுத்துக்காட்டு உவமையணி

B] பிரிதுமொழிதல் அணி

C] உவமையணி

D] வஞ்சிப்புகழ்ச்சியணி

23) இன்மையுள் இன்மை விருந்தொரால் - எனத் தொடங்கும் குறளில் அமைந்துள்ள அணி எது?

A] எடுத்துக்காட்டு உவமையணி

B] பிரிதுமொழிதல் அணி

C] உவமையணி

D] வஞ்சிப்புகழ்ச்சியணி

24) கீழ்க்கண்ட எந்தப் பகுதியில் திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் நூலானது இடம்பெற்றுள்ளது?

A] எட்டுத்தொகை

B] பத்துப்பாட்டு

C] பதினெண்மேற்கணக்கு

D] பதினெண்கீழ்க்கணக்கு

25) செல்வத்துள் எந்த செல்வமானது மிகச் சிறந்தது என்று வள்ளுவர் கூறுகிறார்?

A] கல்விச்செல்வம்

B] கேள்விச்செல்வம்

C] கொடைச்செல்வம்

D] படைச்செல்வம்

26) செவி உணவாகிய கேள்வியினை உடையவர்கள் யாருடன் ஒப்பப்படுவர் என்று வள்ளுவர் கூறுகிறார்?

A] தேவர்கள்

B] அந்தணர்கள்

C] மன்னர்கள்

D] முனிவர்கள்

27) கீழ்க்கண்டவற்றில் யார் அவி உணவை உட்கொள்வர் என்று வள்ளுவர் கூறுகிறார்?

A] முனிவர்கள்

B] தேவர்கள்

C] மன்னர்கள்

D] மக்கள்

28) கல்வி, கேள்வி, பண்பு ஆகியவற்றில் சிறந்தவர்கள் கீழ்க்கண்டவற்றில் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்?

A] சான்றோர்

B] பெரியோர்

C] ஆன்றோர்

D] கலைஞர்

29) அவியுணவு - என்பதன் இலக்கண குறிப்பு யாது?

A] வினைத்தொகை

B] பண்புத்தொகை

C] உருவகத்தொடர்

D] இருபெயரொட்டுப் பண்புத்தொகை

30) ஒற்கத்தின் ஊற்றாந் துணை - என்ற குறளில் அமைந்துள்ள ஒற்கம் என்ற சொல்லின் பொருள் யாது?

A] தளர்ச்சி

B] வளர்ச்சி

C] வேகம்

D] தவிப்பு

31) எனைத்தானும் நல்லவை கேட்க, அனைத்தானும் - எனத் தொடங்கும் குறளில் இடம்பெற்றுள்ள எனைத்தானும் என்ற சொல்லின் பொருள் யாது?

A] எவ்வளவு பெரியதாயினும்

B] கேட்ட அளவிற்கும்

C] எவ்வளவு சிறிதாயினும்

D] எந்த அளவிற்கும்

32) இழைத்துணர்ந்து - என்ற சொல்லின் பொருள் யாது?

A] தவறாக ஆராய்ந்து

B] நுட்பமாக ஆராய்ந்து

C] மேலோட்டமாக ஆராய்ந்து

D] அறியாமையில் ஆராய்ந்து

33) இழுக்கல் உடையிழி ஊற்றுக்கொல் அற்றே - எனத் தொடங்கும் குறளில் இடம்பெற்றுள்ள அணியிலக்கணம் எது?

A] எடுத்துக்காட்டு உவமையணி

B] பிரிதுமொழிதல் அணி

C] உவமையணி

D] வஞ்சிப்புகழ்ச்சியணி

34) செவிக்குணவானது எதுவென்று வள்ளுவர் கூறுகிறார்?

A] புகழ்

B] கேள்வி

C] மகிழ்ச்சி

D] வருத்தம்

35) ஒழுக்கமுடையார் வாய்ச்சொல் கீழ்க்கண்டவற்றில் எவற்றைக் குறிப்பதாக வள்ளுவர் கூறுகிறார்?

A] ஊற்றுக்கோல்

B] அளவுக்கோல்

C] துலாக்கோல்

D] ஆன்றுக்கோல்

36) திருக்குறளில் மொத்தம் எத்தனை அதிகாரங்களில் உடைமை என்னும் பெயரில் அமைந்துள்ளது?

A] ஒன்பது

B] எட்டு

C] ஏழு

D] பத்து

37) ஏழு என்னும் பெயரானது எத்தனை குறட்பாக்களில் இடம்பெற்றுள்ளது என்று கூறப்படுகிறது?

A] ஒன்பது

B] எட்டு

C] ஏழு

D] பத்து

38) கீழ்க்கண்டவற்றில் எது சான்றோற்களின் பெருமை என வள்ளுவர் குறிப்பிடுகிறார்?

A] நற்குணங்களில் சிறந்திருத்தல்

B] கடமையை ஆற்றுதல்

C] நாட்டை பேணிக்காத்தல்

D] ஆன்றோரை பேச்சைக் கேட்டல்

39) எந்நத் துள்ளதூஉ மன்று - என்ற குறட்பாவில் இடம்பெற்றுள்ள உள்ளதூஉம் என்னும் சொல்லின் பொருள் யாது?

A] சொல்லிசையளபெடை

B] நிறையிசையளபெடை

C] இன்னிசையளபெடை

D] செய்யுளிசையளபெடை

40) வள்ளுவர் கூறிய சான்றான்மைக்கான தூண்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] அன்புடைமை

B] புறம் பேசுதல்

C] உயிர்களிடத்து இரக்கம்

D] பிறர்க்கு உதவுதல்

41) அன்புநாண் ஒப்பரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு) - எனத் தொடங்கும் குறளில் இடம்பெற்றுள்ள கண்ணோட்டம் என்னும் சொல்லின் பொருள் யாது?

A] உண்மை பேசுதல்

B] நாணம்

C] அன்புடைமை

D] உயிர்களிடத்து இரக்கம்

42) பிற உயிர்களை கொல்லைமையை வள்ளுவர் கீழ்க்கண்டவற்றில் எந்த பொருளாக கூறுகிறார்?

A] ஒப்புரவு

B] சால்பு

C] தவம்

D] உண்மை

43) மாற்றார் - என்னும் சொல்லின் பொருள் யாது?

A] பகைவர்

B] நன்பர்

C] வலிமையானவர்

D] செயல் செய்பவர்

44) இன்மை - என்னும் சொல்லின் பொருள் யாது?

A] தீமை

B] நன்மை

C] வலிமை

D] வறுமை

45) இருநிலம் - என்ற சொல்லின் இலக்கணகுறிப்பு யாது?

A] உருவகம்

B] உரிச்சொற்றொடர்

C] உவமையாகுபெயர்

D] அன்மொழித்தொகை

46) தோல்வியை ஒப்புக்கொள்வதே சான்றாண்மையை அளந்தறியும்______ஆகும்?

A] திண்மை

B] சான்றோர்

C] உரைகல்

D] இனிமை

47) சான்றவர் - என்னும் சொல்லின் இலக்கணகுறிப்பு யாது?

A] வினையாலணையும் பெயர்

B] வினைத்தொகை

C] இருபெயரொட்டு பண்புத்தொகை

D] பண்புத்தொகை

48) அன்புநாண் ஒப்பரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு) - எனத் தொடங்கும் குறளில் இடம்பெற்றுள்ள அணி எது?

A] பிறிதுமொழிதல் அணி

B] ஏகதேச உருவக அணி

C] எடுத்துக்காட்டு உவமையணி

D] வஞ்சிப்புகழ்ச்சி அணி

49) கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை - எனத் தொடங்கும் குறளில் இடம்பெற்றுள்ள அணி எது?

A] எடுத்துக்காட்டு உவமையணி

B] உவமை அணி

C] எடுத்துக்காட்டு உவமையணி

D] இல்பொருள் உவமையணி

50) வள்ளுவர் கூறிய சான்றாண்மை தூண்கள் மொத்தம் எத்தனை?

A] ஏழு

B] எட்டு

C] ஆறு

D] ஐந்து

## விடைகள் - திருக்குறள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 2 | C | 3 | A | 4 | D | 5 | C |
| 6 | A | 7 | B | 8 | D | 9 | A | 10 | A |
| 11 | B | 12 | C | 13 | A | 14 | C | 15 | D |
| 16 | B | 17 | C | 18 | A | 19 | C | 20 | D |
| 21 | A | 22 | C | 23 | A | 24 | D | 25 | B |
| 26 | A | 27 | B | 28 | C | 29 | D | 30 | A |
| 31 | C | 32 | B | 33 | C | 34 | B | 35 | A |
| 36 | D | 37 | B | 38 | A | 39 | C | 40 | B |
| 41 | D | 42 | C | 43 | A | 44 | D | 45 | B |
| 46 | C | 47 | A | 48 | B | 49 | C | 50 | D |

## 3) சிறுபஞ்சமூலம்

1) கண்வனப்புக் கண்ணோட்டம், கால்வனப்புச் செல்லாமை - எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

A] சிறுபஞ்சமூலம்

B] இனியவை நாற்பது

C] நாலடியார்

D] நான்மணிக்கடிகை

2) சிறுபஞ்சமூலம் என்ற நூலை இயற்றிய ஆசிரியர் யார்?

A] கணிதமேதாவியார்

B] காரியாசான்

C] கபிலர்

D] பொய்கையார்

3) கண்ணுக்கு அழகு எதுவென்று கீழ்க்கண்டவற்றில் ஆசிரியர் குறிப்பிடுவது எது?

A] இரந்து செல்லாமை

B] முடிவை துணிந்துரைப்பது

C] இரக்கம் கொள்ளுதல்

D] பிறரை புகழ்வது

4) கீழ்க்கண்டவற்றில் எது ஆராய்ச்சிக்கு அழகு என்று ஆசிரியர் கூறுகிறார்?

A] பிறரை புகழ்ந்து உரைத்தல்

B] குடிமக்களை வருந்தாமல் காப்பது

C] இரக்கம் கொள்ளுதல்

D] முடிவை துணிந்துரைப்பது

5) காரியாசான் அவர்கள் கீழ்க்கண்வற்றில் யாருடைய மகன் என்று சிறப்புப்பாயிரம் கூறுகிறது?

A] மதுரை தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர்

B] தஞ்சை தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர்

C] மதுரை தமிழாசிரியர் மாக்காயனாரின் மகனார்

D] தஞ்சை தமிழாசிரியர் மாக்காயனாரின் மகனார்

6) காரியாசான் அவர்கள் கீழ்க்கண்ட எந்த சமயத்தை சார்ந்தவர் என்று கூறப்படுகிறது?

A] சைவம்

B] பௌத்தம்

C] சமணம்

D] வைணவம்

7) கீழ்க்கண்ட எந்தப் பகுதியில் காரியாசர் எழுதிய சிறுபஞ்ச நூலானது அமைந்துள்ளது?

A] எட்டுத்தொகை

B] பத்துப்பாட்டு

C] பதினெண்மேற்கணக்கு

D] பதினெண்கீழ்க்கணக்கு

8) சிறுபஞ்சம் நூலில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை யாது?

A] 97 வெண்பாக்கள்

B] 97 ஆசிரியப்பாக்கள்

C] 97 கலிவிருத்தம்

D] 97 வஞ்சிப்பாக்கள்

9) சிறுபஞ்சமூலம் நூலில் இடம்பெற்றுள்ள மூலிகைகளில் தவறானது எது?

A] சிறுவழுதுணை

B] நெருஞ்சி

C] சிறுமல்லி

D] கண்டகத்தரி

10) கீழ்க்கண்டவற்றில் காரியாசனை ஒத்த ஒருசாலை மாணாக்கர் யார்?

A] கண்ணன்சேந்தனார்

B] கணிதமேதாவியார்

C] பூதஞ்சேந்தனார்

D] பொய்கையார்

11) சிறுபஞ்சமூலம் என்ற சொல்லில் உள்ள 'மூலம்' என்ற வார்த்தையின் அர்த்தம் யாது?

A] நூல்

B] ஐந்து

C] வேர்

D] மருந்து

12) தோல்கன்றைக் காட்டி பசுவைக் கறக்கும் பழக்கம் கொடியது என்று கூறும் நூல் எது?

A] சிறுபஞ்சமூலம்

B] இனியவை நாற்பது

C] கார் நாற்பது

D] பழமொழி நானூறு

விடைகள் - சிறுபஞ்சமூலம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 2 | B | 3 | C | 4 | D | 5 | B |
| 6 | C | 7 | D | 8 | A | 9 | B | 10 | B |
| 11 | C | 12 | A | | | | | | |

## 4) பாஞ்சாலி சபதம்

1) பாண்டவர்கள் கீழ்க்கண்ட எந்த மாநகரை ஆண்டு வந்தனர் என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்?

A] அஷ்தினாபுரம்

B] விராடம்

C] இந்திர நகர்

D] பாஞ்சலம்

2) புதியதாக கட்டிய கட்டிடத்தை பார்ப்பதற்கு பாண்டவர்களை அழைத்துவர திருதராட்டிரன் யாரை தூதுவராக அனுப்பினார்?

A] விதுரன்

B] பீஷ்மர்

C] சகுனி

D] கர்ணன்

3) மடப்பிடி - என்று திருதராட்டினரால் கூறப்பட்டவள் யார்?

A] குந்தி

B] சிகண்டி

C] பத்மாவதி

D] பாஞ்சாலி

4) மாநகர் மற்றும் தடந்தோள் என்னும் சொல்லின் இலக்கண விளக்கம் யாது?

A] உருவகம்

B] உரிச்சொற்றொடர்

C] வினைத்தொகை

D] வினையாலணையும் பெயர்

5) அடவி - என்னும் சொல்லின் பொருள் யாது?

A] காடு

B] மலை

C] அருவி

D] நகரம்

6) மணிநகர் - என்னும் சொல்லானது கீழ்க்கண்ட எந்த பொருளை குறிக்கிறது?

A] பெரிய நகர்

B] வாணிப நகர்

C] வலிமையுடைய நகர்

D] அழகிய நகர்

7) அடவிமலை யாறெல்லாம் கடந்து போகித் - என்ற வரியில் அடவிமலையாறு என்னும் சொல்லின் பொருள் யாது?

A] இரண்டாம் வேற்றுமைத் தொகை

B] உருவகத்தொடர்

C] உம்மைத்தொகை

D] உரிச்சொற்றொடர்

8) பண்ணவர்போல் மக்களெலாம் பயிலு நாடு - என்ற வரியில் பண்ணவர் என்னும் சொல்லின் பொருள் யாது?

A] மக்கள்

B] தேவர்

C] இறைவர்

D] மன்னர்

9) பாண்டவர்கள் வாழும் நாடு அழியும் பாவச்செயலுக்கு தானும் துணைபுரிய நேர்ந்ததனை எண்ணி வருந்தியவன் யார்?

A] விதுரன்

B] கர்ணன்

C] துரோணர்

D] பீஷ்மர்

10) அரம்பையர் - என்று ஆசிரியர் கீழ்க்கண்ட யாரை குறிப்பிடுகிறார்?

A] அரசியர்கள்

B] அரக்கமகளிர்

C] தேவமகளிர்

D] வைணவபெண்கள்

11) பதமலர் - என்னும் சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] உவமைத்தொடர்

B] உருவகம்

C] உரிச்சொற்றொடர்

D] வினையெச்சம்

12) பாரதியார் இயற்றிய இலக்கிய நூல்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] பாஞ்சாலி சபதம்

B] குயில் பாட்டு

C] கண்ணன் பாட்டு

D] ஞானரதம்

13) பாரதியாரின் பிறப்பு - இறப்பு ஆண்டு யாது?

A] 1882 - 1921

B] 1888 - 1922

C] 1882 - 1922

D] 1888 - 1921

14) விதுரன் பாண்டவர்களை அழைத்துவர இந்திர நகர் செல்லும் காட்சியானது பாஞ்சாலி சபதம் காப்பியத்தில் கீழ்க்கண்ட எந்த சருக்கத்தில் அமைந்துள்ளது?

A] அடிமைச்சருக்கம்

B] சூதாட்டச்சருக்கம்

C] சூழ்ச்சிச்சருக்கம்

D] சபதச்சருக்கம்

15) அனைவரும் அறிந்த இதிகாசக் கதையை எளிய சொற்கள், எளிய நடை, எளிய சந்தம் ஆகியவற்றுடன் கூடிய பெண்ணுரிமை காப்பியமாக தமிழில் பாரதி வடித்துத் தந்த நூல் எது?

A] சந்திரிகையின் கதை

B] குயில் பாட்டு

C] கண்ணன் பாட்டு

D] பாஞ்சாலி சபதம்

16) பாஞ்சாலி சபதத்தின் நூல் அமைப்பு யாது?

A] 6 சருக்கம் + 420 பாடல்கள்

B] 5 சருக்கம் + 412 பாடல்கள்

C] 3 சருக்கம் + 431 பாடல்கள்

D] 5 சருக்கம் + 420 பாடல்கள்

17) பாட்டுக்கொரு புலவன், நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா, தற்கால இலக்கியத்தின் விடிவெள்ளி, மாக்கவி - என போற்றப்படும் கலைஞர் யார்?

A] திரு.வி.க

B] பாரதிதாசன்

C] பாரதியார்

D] வள்ளலார்

18) பாரதியார் பணியாற்றிய வார இதழ்களில் தவறானது எது?

A] கர்மயோகி

B] பாலபாரதா

C] இந்தியா

D] சூர்யோதயம்

19) தமிழுக்கு தொண்டுசெய்வோன் சாவதில்லை - என்று பாடியவர் யார்?

A] திரு.வி.க

B] பாரதிதாசன்

C] பாரதியார்

D] நாமக்கல் கவிஞர்

20) மதுர மொழி என்பதன் பொருள் யாது?

A] பேச்சு மொழி

B] வழக்கு மொழி

C] இனிய மொழி

D] தமிழ் மொழி

விடைகள் - பாஞ்சாலி சபதம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 2 | A | 3 | D | 4 | B | 5 | A |
| 6 | D | 7 | C | 8 | B | 9 | A | 10 | C |
| 11 | B | 12 | D | 13 | A | 14 | C | 15 | D |
| 16 | B | 17 | C | 18 | A | 19 | B | 20 | C |

## 5) ஓய்வும் பயனும்

1) ஓய்வாக இருக்கையில் தமிபி - நீ ஓவியம் வரைந்து பழகு - என்று பாடியவர் யார்?

A] தாராபாரதி

B] நா.காமராசன்

C] பெருஞ்சித்திரனார்

D] நாமக்கல் கவிஞர்

2) மருத்துவ நூல்களுடன் கவிஞர் கீழ்க்கண்ட எந்த நூலையும் சேர்த்து கற்க வேண்டும் என்று கூறுகிறார்?

A] தமிழ்நூல்

B] மனநூல்

C] இலக்கியநூல்

D] நாடகநூல்

3) கீழ்க்கண்ட எந்த நூல்களை கற்றால் அதன் பொருட்டு தீமையும் பொய்ம்மையையும் விடுத்து நல்வாழ்வு வாழலாம்?

A] தத்துவ நூல்கள்

B] மருத்துவ நூல்கள்

C] அறிவியல் ஆராய்ச்சி நூல்கள்

D] இசைத்தமிழ் நூல்கள்

4) பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் யாது?

A] துரைச்செல்வன்

B] இராசகோபாலன்

C] துரைசாமிநாதன்

D] துரை.மாணிக்கம்

5) பெருஞ்சித்திரனார் பிறந்த ஊர் எது?

A] சமுத்திரம்

B] கடலூர்

C] சிதம்பரம்

D] இறையான்குடி

6) பெருஞ்சித்திரனார் அவர்களின் பிறப்பு இறப்பு ஆண்டுகள் எது?

A] 1933 - 1997

B] 1932 - 1996

C] 1933 - 1995

D] 1935 - 1990

7) பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] கனிச்சாறு

B] கொய்யாக்கனி

C] பாவியக்கொத்து

D] பள்ளிச்சிறகுகள்

8) பெருஞ்சித்தினார் கீழ்க்கண்ட எந்த இதழில் ஆசியராக பணியாற்றவில்லை?

A] தமிழ்ச்சிட்டு

B] தென்தமிழ்

C] தமிழ்நிலம்

D] தென்மொழி

9) ஓய்வாக இருக்கையில் தமிபி - நீ ஓவியம் வரைந்து பழகு - எனத் தொடங்கும் பாடலானது பெருஞ்சித்திரனார் எழுதிய கீழ்க்கண்ட எந்த நூலில் இடபெற்றுள்ளது?

A] கனிச்சாறு

B] கொய்யாக்கனி

C] பாவியக்கொத்து

D] பள்ளிப்பறவைகள்

10) பள்ளிப்பறவைகள் நூலில் இடம்பெற்றுள்ள பல பாடல்கள் கீழ்க்கண்ட எந்த இரு இதழ்களில் வெளிவந்தன?

A] தென்மொழி, தமிழ்ச்சிட்டு

B] தென்தமிழ், தமிழ்நிலம்

C] தமிழ்நிலம், தென்மொழி

D] தமிழ்ச்சிட்டு, தெந்தமிழ்

11) பள்ளிப்பறவைகள் என்னும் நூலில் கீழ்க்கண்டவற்றில் எந்த பிரிவு மட்டும் இடம்பெறவில்லை?

A] மணிமொழிமாலை

B] மும்மணிமாலை

C] குஞ்சுகளுக்கு

D] பறவைகளுக்கு

12) வேலூர் சிறையில் இருந்தபொழுது பெருஞ்சித்திரனார் கீழ்க்கண்ட எந்த நூலின் முதல் பகுதியை எழுதினார்?

A] பாவியக்கொத்து

B] கொய்யாக்கனி

C] ஐயை

D] நூறாசிரியம்

13) பல்வேறு காலகட்டங்களில் தாம் எழுதிய தமிழ் உணர்வுப்பாடல்களை கி.பி.1979 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட எந்த பெயரில் மூன்று தொகுதிகளகளாக வெளியிட்டார்?

A] கனிச்சாறு

B] கொய்யாக்கனி

C] நூறாசிரியம்

D] பள்ளிப்பறவைகள்

விடைகள் - ஓய்வும் பயனும்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 2 | B | 3 | A | 4 | D | 5 | A |
| 6 | C | 7 | D | 8 | B | 9 | D | 10 | A |
| 11 | B | 12 | C | 13 | A | | | | |

## 6) திருவிளையாடற்புராணம்

1) புலவர், தம்புலமைத் திறத்தை அறிய இறைவனை வேண்டிச் கீழ்க்கண்டவற்றில் எவற்றை பெற்றனர்?

A] சங்கப்பலகை

B] வீரம்

C] அறிவு

D] செல்வம்

2) சங்கப்புலவர்கள் மொத்தம் எத்தனை பேர்?

A] 48

B] 49

C] 47

D] 45

3) மதுரையில் இறைவனுக்கு சண்பகமாலை சாத்தி வழிபடக்கருதி சண்பக நந்தவனத்தை ஏற்படுத்திய மன்னன் யார்?

A] வங்கிய சேகரபாண்டியன்

B] மாறவர்ம பாண்டியன்

C] சூடாமணி பாண்டியன்

D] குலசேகர பாண்டியன்

4) சண்பக பாண்டியன் என அழைக்கப்பட்ட மன்னர் யார்?

A] வங்கிய சேகரபாண்டியன்

B] மாறவர்ம பாண்டியன்

C] குணசேகர பாண்டியன்

D] சூடாமணி பாண்டியன்

5) வையை நாடவன் மனக்க ருத்துணர்ந்(து) - என்ற வரியில் இடம்பெற்றுள்ள 'வையை நாடவன்' என்னும் சொல்லானது கீழ்க்கண்டவற்றில் யாரை குறிக்கிறது?

A] சோழன்

B] பாண்டியன்

C] சேரன்

D] பல்லவன்

6) பண்டியரின் குலத் தெய்வமாக கீழ்க்கண்டவற்றில் பரஞ்சோதி முனிவர் யாரைக் குறிப்பிடுகிறார்?

A] திந்தினீஸ்வரர்

B] நடராசர்

C] சுந்தர பாண்டியன்

D] அருணாச்சலீஸ்வரர்

7) கொங்குதேர் வாழ்க்கை - எனத் தொடங்கும் பாடலை இயற்றி சொக்கநாதர் யாரிடம் கொடுத்தார்?

A] தருமி

B] சண்பக பாண்டியன்

C] நக்கீரர்

D] இறைவன்

8) விபுதர் - என்னும் சொல்லின் பொருள் யாது?

A] மக்கள்

B] மன்னர்

C] புதல்வர்

D] புலவர்

9) ஆய்ந்த பொற்கிழி அறுக்கும் நம்பியை - என்ற வரியில் இடம்பெற்றுள்ள நம்பி என்ற சொல் குறிக்கும் பொறுள் யாது?

A] தருமி

B] சண்பக பாண்டியன்

C] நக்கீரர்

D] சொக்கநாதர்

10) பனவன் - என்னும் சொல்லின் பொருள் யாது?

A] புலவன்

B] அமைச்சன்

C] வைணவன்

D] அந்தணன்

11) கண்டம் - என்னும் சொல்லின் பொருள் யாது?

A] காலம்

B] கழுத்து

C] கோள்

D] நிறம்

12) நானே குற்றம் கூறினேன் - என்று கூறியவர் யார்?

A] புலவன்

B] சொக்கநாதர்

C] நக்கீரர்

D] மன்னர்

13) சொக்கநாதர் கீழ்க்கண்ட எந்த இனிமை தோன்ற இயற்றி தருமியிடம் கொடுத்தார்?

A] சொல்லினிமை

B] பொருளினிமை

C] இசையினிமை

D] அணியினிமை

14) நக்கீரர் சொக்கநாதர் இயற்றிய பாடலில் எந்த குற்றம் இருப்பதாக குற்றம் சாட்டினார்?

A] சொல் குற்றம்

B] எழுத்து குற்றம்

C] இசை குற்றம்

D] பொருள் குற்றம்

15) மலர்கள் முதலியவற்றால் மணம் சாருமேயின்றி, இருளையொத்த கூந்தலுக்கு இயற்கையில் மணம் இல்லை - என்று கூறியவர் யார்?

A] தருமி

B] சொக்கநாதர்

C] நக்கீரர்

D] சண்பக பாண்டியன்

16) ஞானப்பூங்கோதை - என அழைக்கப்பட்டவர் யார்?

A] பாண்டியமாதேவி

B] உமையம்மை

C] அந்தணர் பெண்கள்

D] அறிவுடைய பெண்கள்

17) வெருவிலான் சலமே முற்றச் சாதித்தான் விளைவு நோக்கான் - என வரியில் இடம்பெற்றுள்ள வெருவிலான் என்னும் சொல்லானது யாரைக் குறிக்கிறது?

A] சொக்கநாதர்

B] பரஞ்சோதி முனிவர்

C] நக்கீரர்

D] தருமி

18) சலம் என்ற சொல்லின் பொருள் யாது?

A] மன கலக்கம்

B] மன உறுதி

C] மன அமைதி

D] மனத்துக்கம்

19) கீழ்க்கண்டவற்றில் யார் உடல் முழுவதும் கண்களை கொண்டவர் என்று பரஞ்சோதி முனிவர் குறிப்பிடுகிறார்?

A] விஷ்ணு

B] பிரம்மன்

C] சோமசுந்தரர்

D] இந்திரன்

20) உம்பரார் பதி - என்னும் சொல்லின் பொருள் யாது?

A] தேவர் தலைவன்

B] அரக்கன் தலைவன்

C] அந்தணர் தலைவன்

D] சங்கப்பலகை தலைவன்

21) பரஞ்சோதி முனிவர் பிறந்த ஊர் யாது?

A] திருவரங்கம்

B] திருமறைக்காடு

C] திருவஞ்சிக்களம்

D] திருவாரூர்

22) பரஞ்சோதி முனிவர் கீழ்க்கண்ட எந்த இரு மொழிகளில் புலமை பெற்று விளங்கினார்?

A] தமிழ், சமஸ்கிருதம்

B] தமிழ், தெலுங்கு

C] தமிழ், வடமொழி

D] உருது, தமிழ்

23) திருவிளையாடற்புராண நூலின் நூல் அமைப்பு யாது?

A] 3 காண்டம் + 62 உட்பிரிவு + 3363 பாடல்கள்

B] 2 காண்டம் + 63 உட்பிரிவு + 3363 பாடல்கள்

C] 4 காண்டம் + 64 உட்பிரிவு + 3360 பாடல்கள்

D] 3 காண்டம் + 64 உட்பிரிவு + 3363 பாடல்கள்

24) திருவிளையாடற்புராணத்தில் காணப்படும் காண்டங்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] புகார்க்காண்டம்

B] மதுரைக்காண்டம்

C] திருவாலவாய்க்காண்டம்

D] கூடற்காண்டம்

25) மதுரைக்காண்டத்தில் அமைந்துள்ள உட்பிரிவுகள் மொத்தம் எத்தனை?

A] 18

B] 30

C] 16

D] 22

26) திருவாலவாய்க்காண்டத்தில் இடம்பெற்றுள்ள உட்பிரிவுகள் மொத்தம் எத்தனை?

A] 18

B] 30

C] 16

D] 22

27) கூடற்காண்டத்தில் இடம்பெற்றுள்ள உட்பிரிவுகள் மொத்தம் எத்தனை?

A] 18

B] 30

C] 16

D] 22

28) பதினெங்கீழ்க்கணக்கு நூல்களில் எந்த நூலில் இறைவன் தருமிக்கு எடுத்தருளிய கொங்குதேர் வாழ்க்கை எனத் தொடங்கும் பாடலானது இடம்பெற்றுள்ளது?

A] அகநானூறு

B] ஐங்குறுநூறு

C] குறுந்தொகை

D] நற்றிணை

29) இறைவனின் அறுபத்து நான்கு திருவிளையாடலை விளக்கி எழுந்த நூல்களில் விரிவானதும் சிறப்பானதும் எனக் கூறப்படும் நூல் எது?

A] பெரியபுராணம்

B] திருவிளையாடற்புராணம்

C] கல்லாடம்

D] கந்தபுராணம்

30) தொடைநயமும், பக்திச்சுவையும் மிக்க திருவிளையாடற்புராண நூலுக்கு உரை எழுதிய புலவர் யார்?

A] வை.மு.கோபாலகிருஷ்ணசாமி

B] அடியார்க்கு நல்லார்

C] ந.மு.வேங்கடசாமி

D] நமச்சிவாய முதலியார்

A] திருவிளையாடற்காண்டம்

B] மதுரைக்காண்டம்

C] கூடற்காண்டம்

D] திருவாலவாய்க்காண்டம்

31) நம் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள தருமிக்கு பொற்கழி அளித்த படலமானது எந்த காண்டத்தில் அமைந்துள்ளது?

விடைகள் - திருவிளையாடற்புராணம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 2 | B | 3 | C | 4 | D | 5 | B |
| 6 | C | 7 | A | 8 | D | 9 | A | 10 | D |
| 11 | B | 12 | C | 13 | A | 14 | D | 15 | C |
| 16 | A | 17 | C | 18 | B | 19 | D | 20 | A |
| 21 | B | 22 | C | 23 | D | 24 | A | 25 | A |
| 26 | C | 27 | B | 28 | C | 29 | B | 30 | C |
| 31 | D | | | | | | | | |

## 7) இன்பம்

1) பழந்தமிழ் கற்றல் இன்பம் - எனத் தொடங்கும் பாடலானது சுரதாவின் கீழ்க்கண்ட எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

A] தேன்மழை

B] துறைமுகம்

C] சுவரும் சுண்ணாம்பும்

D] சுரதாவின் கவிதைகள்

2) பழந்தமிழ் கற்றல் இன்பம் - எனத் தொடங்கும் பாடலானது தேன்மழை என்னும் நூலில் கீழ்க்கண்ட எந்த தலைப்பில் இடம்பெற்றுள்ளது?

A] இயற்கையெழில்

B] தேன் துளிகள்

C] ஆராய்ச்சி

D] தேன்மொழி

3) குழந்தையின் தளிர்க்கை பட்ட - என்ற வரியில் இடம்பெற்றுள்ள தளிர்க்கை என்னும் சொல்லின் இலக்கணகுறிப்பு யாது?

A] உரிச்சொற்றொடர்

B] உருவகம்

C] உவமைத்தொகை

D] பண்புத்தொகை

4) சுரதாவின் இயற்பெயர் யாது?

A] இராசகோவிந்தன்

B] இராசராசன்

C] இராசமாணிக்கம்

D] இராசகோபாலன்

5) சுரதா பிறந்த ஊர் எது?

A] திருவரங்கம்

B] பழையனூர்

C] இரட்டனை

D] துள்ளம்

6) சுரதா பிறந்த ஊரானது கீழ்க்கண்ட எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

A] நாகைப்பட்டினம்

B] திருவள்ளூர்

C] திருவாரூர்

D] நாமக்கல்

7) எந்த புலவர் மீது கொண்ட அதிக பற்றால் இராசகோபாலன் அவர்கள் தம் பெயரை சுப்புரத்தினதாசன் என மாற்றிக் கொண்டார்?

A] பாரதியார்

B] பாரதிதாசன்

C] திரு.வி.க

D] நாமக்கல் கவிஞர்

8) சுரதாவின் எந்த நூலானது தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை வழங்கும் சிறந்த நூலுக்கான பரிசைப் பெற்றுள்ளது?

A] சாவின் முத்தம்

B] சுவரும் சுண்ணாம்பும்

C] துறைமுகம்

D] தேன்மழை

9) சுரதாவை உவமைக் கவிஞர் என்று முதன் முதலாக புகழ்ந்தவர் யார்?

A] பாரதிதாசன்

B] புலமைபித்தன்

C] ஜெகசிற்பியன்

D] வண்ணதாசன்

10) சுரதா இயற்றிய தேன்மழை என்னும் கவிதை தொகுப்பில் மொத்தம் எத்தனை பகுதிகள் இடம்பெற்றுள்ளன?

A] 16

B] 12

C] 20

D] 18

11) சுரதாவை கி.பி.1947 ஆம் ஆண்டு இவர் பாரதிதாசன் பரம்பரை கவிஞர் என அறிமுகம் செய்த இதழ் எது?

A] தென்றல்

B] பொன்னி

C] தமிழ்மாலை

D] தமிழர்நிலம்

12) எந்த ஆண்டின் போது சுரதாவின் தேன்மழை என்னும் கவிதை நூலுக்கு தமிழக அரசின் பரிசு கிடைத்தது?

A] 1957

B] 1991

C] 1963

D] 1969

13) சுரதா அவர்கள் கீழ்க்கண்ட யாரிடம் தமிழ் இலக்கணங்களை பயின்றார்?

A] இராமலிங்க பிள்ளை

B] பாரதிதாசன்

C] சீர்காழி அருணாசல தேசிகர்

D] கு.ச.கிருட்டிணமூர்த்தி

விடைகள் - இன்பம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 2 | B | 3 | C | 4 | D | 5 | B |
| 6 | C | 7 | B | 8 | D | 9 | C | 10 | A |
| 11 | B | 12 | D | 13 | C | | | | |

## 8) முத்தொள்ளாயிரம்

1) மல்லல் - என்னும் சொல்லின் பொருள் யாது?

A] வலிமை

B] வளமை

C] நெருக்கம்

D] துன்பம்

2) கீழ்க்கண்டவற்றில் யார் வாடாத மாலையை அணிபவர்கள் என ஆசிரியர் கூறுகிறார்?

A] அரக்கர்கள்

B] இறைவன்

C] தேவர்கள்

D] தூயவர்கள்

3) வில்லெழுதி வாழ்வார் விசும்பு - என்ற வரியில் இடம்பெற்றுள்ள விசும்பு என்னும் சொல்லின் பொருள் யாது?

A] வலிமை

B] வளமை

C] நெருக்கம்

D] வானம்

4) மல்லல் நெடுமதில் - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] உரிச்சொற்றொடர்

B] பண்புத்தொகை

C] வினைத்தொகை

D] உம்மைத்தொகை

5) நெடுமதில் - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] உரிச்சொற்றொடர்

B] பண்புத்தொகை

C] வினைத்தொகை

D] உம்மைத்தொகை

6) துலை என்பதன் பொருள் யாது?

A] எடை

B] அறுத்து

C] தராசு

D] உடல்

7) நெருங்கி அமைந்த இலைபோன்ற வடிவிலான வேலை உடைய மன்னன் யார்?

A] பாண்டிய மன்னன்

B] சேர மன்னன்

C] சோழ மன்னன்

D] கலிங்க மன்னன்

8) எந்த நாட்டு மன்னனின் யானை தன் தந்தைகளை எழுத்தாணியாகவும், வீரம் செறிந்த வேற்படையையுடைய பகை மன்னரின் அகன்ற மார்புகளை ஓலைகளைக்கொண்டு செல்வம் நிறைந்த உலகமெல்லாம் எம் நாட்டுக்குரியது என எழுதும் என ஆசிரியர் கூறுகிறார்?

A] சேர மன்னன்

B] பாண்டிய மன்னன்

C] சோழ மன்னன்

D] பல்லவ மன்னன்

9) மருப்பு - என்னும் சொல்லின் பொருள் யாது?

A] தந்தம்

B] எழுத்தாணி

C] நெருப்பு

D] உலகம்

10) இலைவேல் - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] உருவகங்கள்

B] உவமைத்தொகை

C] ஆறாம் வேற்றுமைத்தொகை

D] பண்புத்தொகை

11) மருப்பூசி, மார்போலை - ஆகியவற்றின் இலக்கண குறிப்பு எது?

A] இரண்டாம் வேற்றுமைத்தொகை

